தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 12 ஜூலை 2012 கனி 8

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office on 10 th Jul. 2012

To

ஒருவன் மல்லயுத்தம்பண்ணினாலும்,
சட்டத்தின்படி பண்ணாவிட்டால்
முடிசூட்டப்படான் - 2தீமோத்தேயு 2:5

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA




BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

*Our Radio & TV Programs*
SriLanka Radio Sw25,41 Meter
on Saturday 5.30P.M
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

## எர்மோன் - Hermon



- இது ஒரு பனி மலை என்றும் சாம்பல் நிறகேசம் மலை என்றும் பெயரிடப்பட்டுள்ளது.
- சீதோனியர் எர்மோனைச் சிரியோன் என்கிறார்கள்; எமோரியரோ அதைச் சேனீர் என்கிறார்கள்.
- இம்மலையிலுள்ள சிகரங்கள் கடல் மட்டத்திலிருந்து 9200 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- யோர்தான் நதியின் உற்பத்தி ஸ்தானம் இதனுடைய சரிவில் இருக்கிறது (சங்.133:3).
- சிங்கங்களும், சிறுத்தைகளும் வாழ்ந்த காட்டுப்பகுதியாக கூறப்படுகிறது.
- நியாயாதிபதிகள் புத்தகத்தில் இம்மலையைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது (நியா.3;3)
- இம் மலை யோசுவாசின் படையெடுப்புகளின் வடக்கு எல்லையாகக் குறிக்கப்பட்டது.



யோபுவின் இழப்புகள்
Job`s Losses

இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ் செய்யவுமில்லை தேவனைப் பற்றிக் குறைசொல்லவுமில்லை யோபு 1:22

நீங்கள் தேவனை குறைசொல்லலாமா?

| | |
|---|---|
| ஏழு குமாரர் | - யோபு 1:2 |
| மூன்று குமாரத்திகள் | - யோபு 1:2 |
| ஏழாயிரம் ஆடுகள் | - யோபு 1:3 |
| மூவாயிரம் ஒட்டகங்கள் | - யோபு 1:3 |
| ஐந்நூறு ஏர்மாடு | - யோபு 1:3 |
| ஐந்நூறு கழுதை | - யோபு 1:3 |
| திரளான பணியாட்கள் | - யோபு 1:3 |

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் பிலிப்பியர் 4:19

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 143

போட்டியாளாகள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. நான் பேச்சிலே கல்லாதவனாயிருந்தாலும், அறிவிலே கல்லாதவனல்ல என்ற அப்போஸ்தலன் யார்?
2. எவர்களின் அகந்தை அவர்கள் முகத்துக்கு முன்பாகக் சாட்சியிடுகிறது?
3. ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் எவர்களுக்கும் வருகிறது?
4. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து, நீங்கள் எனக்கு எப்புத்திரரைப்போல இருக்கிறீர்கள் என்றார்?
5. சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை இயேசுவானவர் எதினாலே ஒழித்தார்?
6. வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமானோர் எங்கு வசித்தார்கள்?
7. நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது என்ற அப்போஸ்தலன் யார்?
8. எந்த வம்சத்துத் தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந்தீர்க்கிறார்கள் என்று கர்த்தர் எச்சரித்தார்?
9. கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் என்ன வரும்?
10. கர்த்தருடைய எரிச்சல் எதைப்போல இறைக்கப்படுகிறது?



| | |
|---|---|
| அவரவர் ஒவ்வொரு தங்கக்காசு | - யோபு 42:11 |
| அவரவர் ஒவ்வொரு பொன் ஆபரணம் | - யோபு 42:11 |
| 14,200 ஆடுகள் | - யோபு 42:12 |
| 6,000 ஒட்டகங்கள் | - யோபு 42:12 |
| 1000 ஏர்மாடுகள் | - யோபு 42:12 |
| 1000 கழுதைகள் | - யோபு 42:12 |
| 7 குமாரர்கள் | - யோபு 42:13 |
| 3 குமாரத்திகள் | - யோபு 42:13 |

யோபு இரட்டிப்பாக ஆசீர்வதிக்கப்பட்டார்
Job was Blessed Twice



இதற்குப்பின்பு யோபு நூற்று நாற்பது வருஷம் உயிரோடிருந்து, நாலு தலைமுறையாகத் தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான் - யோபு 42:16

உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் நீதிமொழிகள் 28:20


சிறுவர் பகுதி

**தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!**



# நாங்க!

தி வோ்ட் ஆப் கிரைஸ்ட் சிறுவர் பகுதி வாசகர்கள். **நீங்க!**



message by Jerry

**The 3rd World Evangelism Retreat**

செப்டம்பர் 24-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை காலாண்டு விடுமுறை நாட்களில் நடைபெறும். கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் ரூ50/- செலுத்தி உங்களுடைய பெயரை பதிவு செய்துகொள்ளுங்கள். யூதா புத்தகத்திலிருந்து பாடங்களை Bro.Jerry நடத்துவார்கள். உங்களுடைய இடத்திற்கு முந்துங்கள்.

-தொடர்புக்கு: 94435 58041

### நடப்புச்செய்திகள்

- கிராம பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைக்க முன்வரும் நிறுவனங்களுக்கு அரசு சலுகை வழங்கும் என தொழில்துறை அமைச்சர் தங்கமணி தெரிவித்துள்ளார்.
- மதுரை - கொழும்பு விமான சேவை விரைவில் துவக்கப்படும் என இலங்கை அமைச்சர் பிரியங்காரா ஜெயத்னே தெரிவித்துள்ளார்.
- தகவல் தொடர்பு செயற்கைக்கோள்களை தயாரிக்கும் பணிகளை, தொழில் நிறுவனங்களிடம்

### தேவை

**கர்த்தருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு குடும்பத்தார் தேவை**

**தொடர்புக்கு:**

**94435 58041**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

**புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்**

**மரம் - 12 ஜுலை - 2012 கனி - 8**


**ஆசிரியருரை**

## வேறொரு நாமம் இல்லை
## There Is No Other Name



உலகத்திலே உன்னதமான நாமம் இயேசுவின் நாமமே. **இந்த நாமம் உயர்வான நாமம்.** எப்படியெனில், “இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்” என்று பிலி.2:10,11 வசனங்களில் படிக்கிறோம். இதை அறியாத ஜனங்கள் காணாத நாமத்தையும், செவிகொடாத நாமத்தையும் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். வானத்திலும் சரி பூமியிலும் சரி ஒரே ஒரு நாமமே கொடுக்கப்பட்டுள்ளது. அது இயேசுவின் நாமம். அது மேன்மையான நாமம். எபிரெய ஆசான் சொல்லும்போது; “இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்” என்று சொல்லுகிறார் (எபி.1:4).

சிலர் நாமத்தில் என்ன இருக்கிறது என்று கேட்கிறார்கள். இயேசு என்ற நாமம் பிதாவாகிய தேவனால் முன்னறிவிக்கப்பட்ட நாமம். தேவதூதனால் யோசேப்புக்கு சொல்லப்பட்டது; “அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்” (மத்.1:21). யோசேப்பும் மரியாளும் சேர்ந்து வைத்த பெயர் அல்லது தேவதூதன் சொன்னபடியே அவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள். “எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?” என எபிரெய புத்தகத்தில் படிக்கிறோம். எத்தனையோ தீர்க்கதரிசிகளை பிதாவாகிய தேவன் அனுப்பிக்கொண்டு வந்தார். மற்றும்

தேவதூதர்கள் மூலமாகவும் ஜங்களை சந்தித்துக்கொண்டு வந்தார். இவர்களுக்கு மேலாக தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படியாக, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அதிகாரம் கொடுத்து அவரை தம்முடைய முதற்பேறான குமாரனாக்கினார். இத்தனை பெரிய ஆசீர்வாதத்தை இயேசுவானவர் எப்படி சம்பாதித்தார் என்று நீங்கள் நினைக்கக்கூடும். ''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்''. ஒரு மனிதனுக்கு உயர்வான இடத்தைக் கொடுத்துவிட்டு, பின்பு கீழான இடத்திற்கு போகச்சொன்னால் அந்த உயர்வான இடத்திலிருந்து என்னை போகச்சொன்னதன் காரணம் என்ன? என்று சண்டையிடுவான். ஆனால் ஆண்டவராகிய இயேசு தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார். ஆகையால் பிதாவாகிய தேவன் எல்லாவற்றிற்குமேலாக அவரை உயர்த்தினார்.

**இயேசுவின் நாமம் குணமாக்கும் நாமம்.** இன்றைக்கு உலகமெங்கும் கர்த்தருடைய நாமத்தை அநேகர் பற்றிகொள்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் என்ன? அவருடைய நாமத்தில் அநேகர் குணமாக்கப்படுகிறார்கள். உண்மையான வைத்தியனை ஜனங்கள் அடையாளம் கண்டுகொள்கிறார்கள். ஆகையால் அதிமான ஜனங்கள் தங்களுடைய வீணான மார்க்கத்தை விட்டு ஜீவனுள்ள தேவனுடைய மார்க்கத்தில் வந்து இணைகிறாகள். ஒரு முறை பேதுரு ஒரு சப்பாணியை கையைபிடித்து இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று தூக்கிவிட்டான் அவன் குதித்தெழுந்து நடந்து அவர்களோடு தேவாலயத்திற்கு சென்றான். இதைப் பார்த்த ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது பேதுரு; ''அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது'' என்றான் (அப்.3:16). இன்றைக்கு மனிதர்களை நாடி அங்குமிங்கும் ஓடுகிறார்கள். அங்கே சென்றால் சுகமாகாதா, இங்கே சென்றால் சுகமாகாத என்று அலைந்து திரிகிறார்கள். நூற்றுக்கு அதிபதியின் விசுவாசம் அநேகருக்கு வருகிறதில்லை. அவன் இயேசுவைப் பார்த்து ஆண்டவரே நீர் என்வீட்டுக்கு வர நான் பாத்திரனல்ல ஒரு வார்த்தை சொல்லும் என் வேலைக்காரன் பிழைப்பான் என்றான். இவனுடைய விசுவாசத்தைக் கர்த்தர் கண்டு தமக்குப்பின் செல்லுகிற ஜனங்களைப் பார்த்து இஸ்ரவேலுக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தை



## பொது அறிவு சோதனை

1. 1858-ம் ஆண்டில் மகாராணி அறிக்கை வெளியிட்டவர்?
அ) விக்டோரியா ராணி ஆ) எலிசபெத் ராணி இ) ராணிமேரி
2. கெல்வின் அளவுமுறையில் மனித உடம்பின் சராசரி வெப்பநிலை?
அ) 280 ஆ) 290 இ) 340
3. நெல்லின் தாவரவியல் பெயர் என்ன?
அ) ஒரைசா சட்டைவா ஆ) எல்யூசின் கோரகனா இ) சொலானம் நைக்ரம்
4. உலகில் இறப்பு விகிதம் குறைவாக உள்ள நாடு எது?
அ) அமெரிக்கா ஆ) ஜப்பான் இ) நியூசிலாந்து
5. இந்தியப் பல்கலைக்கழகங்களில் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?
அ) 1904 ஆ) 1913 இ) 1917

விடைகள்: 1.அ 2.இ 3.அ 4.ஆ 5.அ

**வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்**

**ஜெபியுங்கள்**

- திருச்சியில் நடைபெறும் கூட்டத்திற்க்காக...
- செப்டம்பர் கூட்டங்களுக்காக...
- நாடும், தேசமும் கர்த்தரை அறிந்துகொள்ள...
- மாணவர்கள் குடும்பங்களுக்கும், பள்ளிக்கும் நற்பெயர் பெற்றுத்தர...
- நமது தொலைக்காட்சி, வானொலி மற்றும் மாதஇதழ்

## எருசலேம் - Jerusalam




*-Ravi Asir*

எகிப்தியர் தங்களுடைய பிந்திய கி.மு.20 மற்றும் 19-ம் நூற்றாண்டு குறிப்புகளில் குறிப்பாக தங்களுடைய பகைமையை வெளிப்படுத்தும் இடங்களில் "உருசலீமம்" என்று இப்பட்டணத்தை குறிப்பிட்டிருக்கிறார்கள். கி.மு.14-ம் நூற்றாண்டில் டெல் எல் - அமர்னா என்ற இடத்தில் கிடைத்த குறிப்புகளில் இப்பட்டணம் "உருசலீம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்குப்பின் சனகெரீப் ராஜாவின் கல் வெட்டுக்களில் இந்நகரம் "உர்சலிம்மு" என்று பெயரில் காணப்பட்டிகிறது. எபிரெய மற்றும் அரேபிய மொழிகளின் அடிப்படையில் உரு=நகரம்; சலீம்=ஒரு தெய்வீகமான பெயர் என்று அர்த்தம் கொள்ளப்படுகிறது. மொத்தத்தில் இந்நகரம் "சலீமின் நகரம்" அல்லது "தேவனுடைய நகரம்" என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கிறது. பல தெய்வ வணக்கமாகிய அருவருப்புகளில் இந்த நகரம் பெயர் பெற்று விளங்கியிருக்கிறது (எசேக்.16:2).

எபிரெயருடைய பேச்சு மொழியாகிய அராமிக் மொழியில் இப்பட்டணம் "எருஷலேம்" என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. யாரா=அஸ்திபாரம் போட, நிர்மானம் செய்ய; ஷாலேம்= ஒரு தெய்வீகமான பெயர். எனவே எருசலேம் என்ற பெயர் "தேவனுடைய அஸ்திபாரம்" என்ற அர்த்தத்தை அளிக்கிறது. (யோபு38:6) அஸ்திபாரம் என்ற வார்த்தை நிலையான வீட்டைச் சுட்டிக் காட்டுகிறது. கூடாரமாகிய நிலையற்ற வீட்டுக்கு எதிரிடையாக (எபி.11:10) "ஷலேம்" என்ற பெயரை தேவனே இந்த நகரத்திக்கு கொடுத்திருக்கிறார் என்பதை மேற்கண்ட நிருபணங்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளமுடிகிறது.

புதிய ஏற்பாட்டில் "எருசலேம்" என்ற அர்த்தத்தை அராமிக் மொழியிலிருந்து கிரேக்க மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அச்சமயத்தில் "இரோ சொலூமா" என்ற வார்த்தையும் உபயோகத்தில் இருந்திருக்கிறது. இதில் "இரோஸ்" என்ற பதம் பரிசுத்தத்தை அடையாளப்படுத்துகிறது (வெளி.21:2)

எருசலேம் என்ற பெயரோடே கூட இப்பட்டணம் சாலேம், எபூஸ், மோரியா, ஏலியல், நகரம், ஏலியா, கேபிடோலினா மற்றும் எல்-குட்ஸ் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.

(1இரா.11:3) சாலொமோன் 700 மனைவிகள் அநேக இளவரசிகள். 300 மறுமனையாட்டிகள் இருந்தார்கள். கடைசியில் அவனுடைய மனைவிகள் சாலொமோனின் இருதயத்தை தேவனிடத்திலிருந்து வழுவிப்போகப் பண்ணினார்கள். இதுவும் தேவனுடைய திட்டம் அல்ல.

தேவனுடைய திட்டத்திற்கு மாறாக மனிதர்கள் தங்கள் சுயவிருப்பத்தின்படி செய்யும்போது பலவிதமான பிரச்சனைகளிலும், மன உளைச்சல்களிலும், தேவனை விட்டு விலகிய நிலையிலும் வாழ வேண்டியவர்களாக தள்ளப்படுகிறார்கள்.

**தேவனுடைய திட்டம் என்ன என்பதைப் பார்ப்போம்.**

(ஆதி.2;23,24) மனிதன் தகப்பனையும், தாயையும் விட்டு தன் மனைவியோடு இசைந்து இருப்பான். அவர்கள் ஒரே மாமிசமாக இருப்பார்கள். (எபே.5:23) அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியது; கிறிஸ்து சபைக்கு தலையாக இருக்கிறதுபோல புருஷனும் மனைவிக்கு தலையாக இருக்கிறான். (எபே.1:22,23) நாம் அனைவரும் சபையில் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாயும் (எபே.4:4) ஒரே சரீரமும் ஒரே சபையுமாக இருக்கிறோம்.

மனிதன் அநேக மனைவிகளை வைத்துக் கொள்ள அனுமதியிருந்தால் கிறிஸ்துவும் அநேக பிரிவினை சபைகளை உருவாக்கி இருப்பார். கிறிஸ்து ஒரே சபையை உருவாக்கினார் (என் சபையைக் கட்டுவேன்) மத்தேயு 16:18. ஆகவே மனிதனும் ஒரே மனைவியை உடைய புருஷனாக இருக்கவேண்டும்.

(மத்.19:5,6) இயேசு கிறிஸ்து சொன்னது: மனிதன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு பிரிந்து இருவரும் (ஒரு ஆண், ஒரு பெண் - இருவரும்) ஒரே மாம்சமாக இருப்பார்கள். எவனொருவன் ஒரு மனைவிக்கு அதிகமாக மனைவிகளைக் கொள்ளும்போது, அவன் தேவனுடைய கட்டளையை மீறுகிறான். தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறான். தேவன் பாவத்தை வெறுக்கிறார்.

(1தீமோ.3;2) சபையை போதித்து நடத்தக்கூடிய மூப்பர்களுக்கு தேவன் இந்த பூமியில் வாழும்போது கட்டளையை கொடுத்து இருக்கின்றார். அதாவது மூப்பரானவர் ஒரே மனைவியை உடைய புருஷனாய் இருக்கவேண்டும். இவர்கள் இந்த கட்டளையை மீறும்போது தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். சபை நடத்துபவர்களாக இருந்தாலும் சரி, சபை அங்கத்தினர்களாக இருந்தாலும் சரி, இப்படிப்பட்டவர்கள் சபையில் அங்கம் வகிக்கும் தகுதியில்லாதவர்கள்.

தேவனுடைய திட்டத்தை மீறி நடக்கும் யாவரும் கண்டிப்பாக தேவனுடைய திட்டத்திற்கு விலகிதான் வாழ முடியும். ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தவுடன் ஏதேன் தோட்டத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். ஆகையால் தேவனுடைய திட்டத்தை மீறி நடக்கிறவர்கள் உண்மையாகவே மாய்மாலம்பண்ணுகிறவர்களாகவும், தேவனை ஏமாற்றுகிறவர்களாகவும், மேலும் தங்களையே ஏமாற்றிக்கொள்ளுகிறவர்களாகவும் வாழ்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையில் இருக்க தகுதியற்றவர்கள். இவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளமுடியாது. ஆகவே தேவனுக்குப் பயந்து உண்மையான ஒரு கிறிஸ்தவனாக ஒரே மனைவியை உடைய புருஷனாயிரு.



காணவில்லை என்றார். அவனுடைய விசுவாசம் அப்படிப்பட்டதாக இருந்தது. வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த கர்த்தர் எங்குமிருக்கிறார். அவர்மூலமாக நாம் வேண்டிக்கொள்ளும்போது அவர் பரமபிதாவிடம் நமக்காக வேண்டிக்கொள்வது அதிக நிச்சயமல்லவா! முதல் நூற்றாண்டு சீஷர்கள், சபையார்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதில் மிக தீவிரமாக இருந்தனர். அப்பொழுது அவர்கள் கூடி ''உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்று ஜெபித்தார்கள் (அப்.4:30). இப்படியாக கர்த்தர் அப்போஸ்தலர்கள் மூலமாக அநேக அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி அநுக்கிரகஞ்செய்தார்.

இயேசுவின் நாட்களில் அவரால் குணமாக்கப்பட்டவர்கள் அநேகர். இயேசு ஒரு கிராமத்திற்கு வருகிறார் என்ற கேள்விப்பட்டால் போதும் வியாதிக்காரர்கள் அநேகர் கூட ஆரம்பித்துவிடுவார்கள். அந்தப்படியாக ஒரு முறை இயேசு கெனேசரேத்து நாட்டிற்கு சென்றார். ''அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்'' என்று மத்.14:35,36 வசனங்களில் படிக்கிறோம். வைத்தியரை நாடினால் அவர்கள் வைத்தியம் செய்து மருந்து மாத்திரைகள் கொடுப்பார்கள். ஆனால், இயேசுவை தொட்ட யாவரும் சுகமானார்கள். மேலும், அப்போஸ்தனாகிய பேதுரு தமது பிரசங்கத்தில்; ''அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்'' என்று குறிப்பிடுகிறார் அப்.10:38-ம் வசனம். இந்த பூமியில் வந்த ஞானவான்கள் தேவ மனிதர்கள் என்று தங்களை சொல்லிக்கொண்டவர்கள். எல்லோரும் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்களுடைய முடிவு என்ன என்பதைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். தங்களுக்கு வேண்டிய சொகுசான வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர். கஷ்டத்தின் மத்தியில் இருக்கிற ஜனங்களை கண்டுகொள்ளாமல் வாழ்ந்தனர். ஆனால், ஆண்டவர் இயேசு எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார். இன்றைக்கு நேயாளியைக் கண்டால் அந்த நோய் தனக்கு வந்துவிடும் என்று அச்சப்பட்டு ஒதுங்கிப்போகிற மக்கள் இருக்கிறார்கள். ஆனால், இயேசு அவர்களை நேசித்து தொட்டு, அவர்களுடைய காரியங்களை விசாரித்து நன்மைசெய்கிறவராய் இருந்தார்.

**இயேசுவின் நாமம் இரட்சிக்கும் நாமம்.** அவருடைய நாமத்தில் இரட்சிப்பு உண்டு. நாமம் எப்படி இரட்சிக்கும் என்று நீங்கள் கேட்கலாம். ஒரு நாட்டில் போடப்படும் சட்டம் ஒரு மனிதனை காப்பாற்றுகிறதில்லையா, பிதாவாகிய தேவன் மனிதர்களுக்குள்ளே இரட்சிக்கும் நாமத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்.4:12). வெறி நாய் கடிக்கு ஊசி கண்டுபிடித்து இருக்கிறார்கள். அந்த ஊசியைப்போட்டால்தான் வெறிநாய் கடிபட்டவனை காப்பாற்றமுடியும். அதைப்போல ஒரு ஆத்துமாவை பாவத்திலிருந்து காப்பாற்ற, அதாவது இரட்சிக்க; இயேசுவின் நாமமே கட்டளையிடப்பட்டிருக்கிறது. வேறொரு நாமத்தை பற்றிக்கூப்பிட்டாலும் அது அந்த ஆத்துமாவை இரட்சிக்காது. வேறொரு நாமம் சொல்லப்படவும் இல்லை கட்டளையிடப்படவும் இல்லை. ஆனால் போலியான அநேக நாமங்கள் தோன்றியிருக்கிறது. அவைகள் வீணானவைகள். அவைகளால் ஒரு ஆத்துமாவையாவது காப்பாற்றமுடியாது. அவைகள் பூமிக்குரியவைகள் வானமும் பூமியும் அழியும்போது அவைகளும் அவைகளை உண்டுபண்ணினவர்களும் அழிந்துபோவார்கள். பவுல் மனந்திரும்பும்போது அனனியா பவுலை நோக்கி; "இப்பொழுதும் நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்" (அப்.22:16) உடனே அவன் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று, இரட்சிக்கப்பட்டான். கர்த்தருடைய நாமம் அவனை இரட்சித்தது. அதைப்போல அப்போஸ்தலனாகிய பவுல் சிறைச்சாலைக்காரனுக்கும் அவன் வீட்டில் இருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப்போதிக்கும்போது அவர்கள் "இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப்.16:33). இப்படி கர்த்தருடைய நாமத்தில் கீழ்ப்படிகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் என அப்.2:47-ல் படிக்கிறோம். இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கிற தேவ ஜனமே வானத்திலும் பூமியிலும் ஒரே ஒரு நாமமே கட்டளையிடப்பட்டுள்ளது. அந்த நாமம் உயர்வானது, அந்த நாமம் குணமாக்கும் வல்லமையுள்ளது, அந்த நாமம் நம்மை இரட்சிக்க வல்லது. அந்த நாமத்தைப் பற்றிக்கொள்ளுங்கள். அப்பொழுது காப்பாற்றப்படுவீர்கள்.

**இயேசுவின் நாமத்திலே சபையாக கூடிவரவேண்டுமா?**

எந்த பெயரிலும் சபை கூடிவரலாம் என்று அநேகர் நினைக்கின்றனர். அது



# ஒருவனுக்கு ஒரு மனைவிதானா அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகள் வைத்துக்கொள்ளலாமா?

- *Mohan*

## தேவனுடைய ஆலோசனையைப் பார்ப்போம்



ஆதி.2:24 தேவன் ஆதாமை (முதல் மனிதனை) உண்டாக்கினார். மனிதன் தனிமையாக இருப்பது நல்லது அல்ல என்று தேவன் ஏவாளை துணையாக (மனைவியாக கொடுத்தார்) (மனைவிகளை அல்ல) மனைவியை துணையாக கொடுத்தார். தேவனுக்குத் தெரியும் இது நல்லது என்று.

மனிதர்கள் பலவித கலாச்சாரங்களில் வாழ்கின்றனர். பலர் இந்த உலகத்தில் திருமணத்தை குறித்து பலவிதமாக சிந்திக்கின்றார்கள். அநேகர் தேவனுடைய ஆலோசனையை ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக அவர்கள் விருப்பப்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுகின்றனர். அவர்கள் திருமணம் செய்வதானாலும் சரி, மனைவிகளை வைத்துக்கொள்ளுவதானாலும் சரி, தேவனுக்கு விரோதமாக சுயமாக முடிவு செய்கின்றனர்.

**தேவனுடைய திட்டத்திற்கு மாறாக வாழ்ந்தவர்களைப் பார்ப்போம்.**

(ஆதி.4:19-21) காயீன் வழியில் வந்த லாமேக்குக்கு என்ன நேர்ந்தது? இரண்டு ஸ்திரிகளை விகாகம் பண்ணினான். அவன் கொலைகாரனாகவும் ஒரு நன்மையும் செய்யாதவனாக வாழ்ந்தான்.

(ஆதி.16:1-5) ஆபிரகாம் மனைவி சாராள் பிள்ளையில்லாமல் இருந்தாள். ஆதலால் அடிமைப் பெண் ஆகாரை ஆபிராமுக்கு மனைவியாக கொடுத்தாள். ஆகாருக்கு பிள்ளை பிறந்தது. பிறகு என்ன நடந்தது? ஆகார் அவளை அற்பமாக எண்ணினாள். (ஆதி. 21:10) இந்த அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும்; இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை என்றாள். கர்த்தரும் ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் ; ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லவற்றையும் கேள் என்றார். ஆகாரை மனைவியாக்கியது தேவனுடைய திட்டமல்ல என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

(நியா.8:30,31) கிதியோன் ஒரு பெரிய தலைவனாக இருந்தான். அவனுக்கு 70 மகன்கள், பல மனைவிகள் இருந்தார்கள். இது தேவனுடைய திட்டமல்ல.

தேவன் நாம் முன்னெச்சரிக்கையாய் இருக்கும்படி விரும்புகிறார் அப்போது தான் நம்முடைய தற்காப்புகள் பலப்படுத்தப்பட்டிருக்கும்.

சாத்தான் இருக்கின்றான் என்பதற்கு உலகத்தில் தீமையானது வினாவற்ற சாட்சியாக எங்குமிருக்கிறபடியினால், இக்காரணத்தினால் இதைப் பின்பற்றுகையில் இது அவித்துப்போடக்கூடாத நன்மையல்ல, மாறாக, தேவன் இருக்கின்றார் என்பதற்கும் ஆதாரமிருக்கிறதல்லவா? மேலும் சாத்தான் பொய்க்குப் பிதாவாயிருக்கிறான் என தேவன் நம்மை முன்னெச்சரிக்கிறபடியினால், தேவனுடைய எதிராளி தொடந்து சந்தேகத்தைத் தூண்டுகிறவானாயிருப்பான் என நாம் எதிர்பார்ப்பதில்லையா? (யோவா.8:44)

"நான் தூங்கினபோது உம்முடைய ஜாக்கிரதையான பராமரிப்பிற்காகவும் என்னுடைய கண்விழிப்பின் போது என்னை உற்சாகப்படுத்தும் ஒரு ஜீவனுள்ள நம்பிக்கைக்காகவும் உமக்கு நன்றி பிதாவே"

நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை. ......நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்பிவிக்கத்தக்கவன் இல்லை........" - ஏசா.43:11-13.

## வாரத்தின் ஏழுநாளும் கர்த்தர் கொடுத்த நாள்

அந்தநாட்களை எப்படி பயன்படுத்துகிறீர்கள்

| | |
|---|---|
| ஞாயிற்று கிழமை | - கர்த்தருடைய சபையோடு தொழுதுகொள்ளுங்கள் |
| திங்கள் கிழமை | - உங்கள் நண்பர்களுக்கு கடிதம் எழுதுங்கள் |
| செவ்வாய் கிழமை | - உங்கள் வீட்டுவேலைகளை கவனியுங்கள் |
| புதன் கிழமை | - வேதாகம பாடசாலைக்கு செல்லுங்கள் |
| வியாழக்கிழமை | - மற்றவர்களுக்கு சுவிசேஷம் சொல்லுங்கள் |
| வெள்ளிக்கிழமை | - உங்கள் தேசத்திற்காக ஜெபியுங்கள் |
| சனிக்கிழமை | - உங்கள் தேவனை சந்திக்க ஆயத்தப்படுங்கள் |

பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது. சங்கீதம் 136:26

**திருத்தம்**

**ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள் Vol.2 புத்தகத்தில் 6-ம் பக்கம் 18வது வரியில் "பரலோகத்திலே என இருக்கிறது அதை "பூமியிலே என திருத்தம் செய்துகொள்ளுங்கள்.**
**சுட்டிக்காட்டிய சகோ.ஹீராலால் மற்றும் அவருடைய நண்பருக்கும் நன்றி.**



தவறு. வேதாகமம் நமக்கு அவ்விதமாக போதிக்கவில்லை. இயேசுவின் நாமம் பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய தேவனால் முன்னறிவிக்கப்பட்டது. அவருடைய சித்தத்தின்படியே நாம் செயல்படவேண்டும். தீர்க்கதரிசிகளுடைய நாமத்தினாலும், அப்போஸ்தலருடைய நாமத்தினாலும் சபை அழைக்கப்படுகிறதை சிலர் விரும்புகின்றனர். அப்போஸ்தலர்களோ தீர்க்கதரிசிகளோ நம்முடைய பாவங்களுக்காக மரிக்கவில்லை. இயேசு ஒருவரே நமக்காக மரித்தும் எழுப்பப்பட்டுமிருக்கிறார். அவருடைய நாமத்தை பிதாவாகிய தேவன் வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அறிவித்துமிருக்கிறார். ஆண்டவர் இயேசு சொல்லும்போது, "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்.18:20). அவருடைய நாமத்தில் நாம் சபையாக கூடிவரும்போது நம் மத்தியில் கர்த்தர் இருப்பார். பிதாவாகிய தேவனை கனம்பண்ணுகிறதுபோல இயேசுவையும் நாம் கனம்பண்ணவேண்டும். இயேசுவின் நாமத்தில் சபையாக கூடுங்கள் நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**வேத அறிவுப்போட்டி எண் 142-ன் விடைகள்**

1. ஆம்-யோவா.16:33
2. கிருபையினாலே - ஏசா.16:5
3. பவுலை - அப்.14:19
4. அல்லவே - எரே.16:20
5. சமாதானமாயிருங்கள் - ரோ.12:18
6. விறகு -புல.5:14
7. பவுல் - 1கொ.7:40
8. சாரமில்லாத -எசே.13:10
9. குறைவுள்ளது, குறைவுள்ளது -1கொ.13:9
10. மூன்று - தானி.3:17

**தமிழ்நாடு கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கான ஆலோசனை கூட்டம்**

**இடம்: திருச்சி**

**பொருள்: சுவிசேஷக வேலையைச்செய்**

**நாள்:**

**ஜூலை 24**

**காலை 10.00 முதல் மாலை 4.00 மணிவரை**

தொடர்புக்கு: 94435 58041
மற்றும் 93451 11920
கலந்துகொள்ளுகிறவர்களுக்கு ஒருவழி பயணச்செலவு, அநேக ஆவிக்குரிய புத்தகங்கள் மற்றும் பாடல் புத்தகம் கொடுக்கப்படும்.

**வேத அறிவுப்போட்டி எண் 142-ல் வெற்றிபெற்றவர்கள்**

1. A. ரெபேக்காள் - சம்பக்குடி
2. A. வான்மதி ஏஞ்சல் - நாசரேத்
3. Mrs. பியூலா ராஜேஸ் - நாசரேத்
4. J. நிர்மலா ஜான் - மதுரை
5. M. வேலு - வேலூர்
6. Tmt. மரகதம் திரவியம் - கோம்பை
7. T. ராஜாத்தி - கோம்பை
8. N. ஜான் செல்லையா - மதுரை
9. J. ஐசக் - வண்ணாரப்பேட்டை
10. Sis. குளோரி ஃபவுல்சர் - சென்னை
11. M. சாலொமோன் - கொடைக்கானல்
12. R. எதிராசன் - சங்கரி


ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது அல்லது மணியாடர், காசோலை அனுப்பும்போதும் உங்களுடைய பதிவு எண் Ref.No-யை எழுதவும்.

நீங்கள் முகவரி மாறும்போது உங்களுடைய புதிய முகவரி மற்றும் பழைய பதிவு எண்ணையும் தெரியப்படுத்தவும்.

# வேதாகமத்தை எவ்வாறு வாசிப்பது?

## How to read the Bible

*J.C.Choate*




நீங்கள் எப்பொழுதாவது வேதாகமத்தை வாசித்திருக்கிறீர்களா? ஆம், அது ஒரு பெரிய புத்தகம் என்பதை நான் அறிந்திருக்கிறேன், அதை வாசிக்க முயற்சி செய்வதும், அதன் செய்தியை உணர்ந்து கொள்ள முயற்சி செய்வதும் ஆகிய எண்ணம் ஒரு அறை கூவலாக இருக்கிறது. நான் உங்களுக்கு சில தகவல்களையும், செய்திகளையும் அளிக்க விரும்புகிறேன். அது இந்த செய்முறையை தெளிவுபடுத்துவதாக இருக்கும். முதலாவதாக நாம் வேதாகமம் தேவனுடைய அதிகாரத்துடனே பேசி, வேதாகமத்தை வாசித்து அதற்கு கீழ்ப்படிகிறவர்களுடைய வாழ்க்கையை வழி நடத்துவதாக இருக்கிறது என்ற உரிமையை நிலை நிறுத்துவது தேவையான காரியமாய் இருக்கிறது. 2தீமோ.3:16-17, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்று உறுதி கூறுகிறது.

வேதவாக்கியங்களை எழுதியவர்கள், அவைகளை "ஆவியினால் ஏவப்பட்டு" எழுதியதாக உரிமையோடே கூறினார்கள் அடிக்கடி சொல்லப்பட்ட விஷயம் என்னவென்றால், "கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி..." (எசேக்.18:1) என்பது ஆகும். முழு வேதாகமும் ஏறக்குறைய 40 மனுஷர்களால், ஏறத்தாழ 1500 வருஷ காலத்துக்கு மேலாக எழுதப்பட்டதாயிருப்பினும் முதல் புத்தகத்திலிருந்து கடைசி புத்தகம் வரை முரண்பாடுகள் அற்ற இசைவான செய்தியை உடையதாக இருக்கிறது. வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமம், தேவனோடே கூட மனுஷன் பரதீசில் இருந்தது தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் மனுஷன் அந்த ஐக்கியத்தின் பழைய நிலைமைக்கு கொண்டுவரப்படுவதுடன் நிறைவடைகிறது. வேதாகமத்தின் எழுத்தாளர்கள் எவரும் ஒரே காலத்தில் வசிக்கவில்லை என்ற போதிலும் அவர்களில் பெரும்பாலானவர்கள், மற்றவர்களால் எழுதப்பட்டவைகளை சென்றடையும் வழி இல்லாதவர்களாக இருந்தனர்.

நம் அறிவுறுத்தப் படுகிறோம்: "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் **சத்தியவசனத்தை நிதானமாய் பகுத்துப்** போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2தீமோ.3;15).

### பழைய, புதிய ஏற்பாடுகள்

வேதாகமத்தை நாம் எவ்வாறு நிதானமாய் பகுத்து பார்க்கிறவர்களாயிருக்கிறோம்? நாம் முதலாவதாக இதில் இரண்டு பெரும் பாகங்கள் இருப்பதை காண்கிறோம்: **பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு.** ஒரு "ஏற்பாடு" என்பது ஒரு உயில் அல்லது உடன்படிக்கையாக இருக்கிறது. இந்த காரியத்தில் உடன்படிக்கைகள் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையே இருக்கிறது.

### பிதாக்களின் காலம்

உலக வரலாற்றில் இரண்டு பிரதான கால பகுதிகளை உள்ளடக்கிய



பார்த்திருப்பவற்றின் இழப்பு உன்னுடைய மிகப்பெரிய நாசமாயிருக்காது. நீ தேவனைக் கண்டிராத போது இழப்பது தான் மிகப்பெரிய நாசமாயிருக்கும். உன்னுடைய இருதயத்தில் இந்த நிகழ்வுகளின் பரிபூரணத்துவம் சாத்தானுடைய பரிகாசத்தோடும் சந்தேகத்தைத் தூண்டும் செயலோடும் பேசுகிறது. மனிதருடைய மனதில் கனவில் உதித்த ஒரு ஆதாரமாக மட்டும் தேவன் இருந்திருப்பாரானால், மனிதனது 'முன்னேற்றம்' மற்றும் 'உண்மையற்றசெயல்' போன்ற எல்லாவற்றிலும் மனிதத்தன்மை தேவனிலுள்ள பழைய வழக்கமான நம்பிக்கையை வளர்ச்சியடையப்பண்ணியிருக்காதா?

ஆனால் மனித சமுதாயத்தின் உள்ளான ஆத்துமா ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கதறுகிறது (சங்.27:7-10).

இன்றும்கூட, இரண்டு வகையான ஜனங்கள் உலகத்தில் இருக்கின்றனர்: விசுவாசிகளை விட தேவனை மறுதலிக்கிற உணர்வினையுடையவர்களும் (நடக்கையிலும் மனக்கிலேசத்திலும்) பிரச்சனை விகிதம் அதிகமுள்ள, தற்கொலை விகிதம் அதிகமுள்ள புள்ளிவிவரத்தை உடையவர்கள் சிலராக இருக்கின்றனர்.

இதற்கு எதிர் வரிசையில் உள்ளவர்கள் அநேகராகிய விசுவாசிகள். சிலரில் உருவாகிறது அல்லது வேறொன்றில், அவர்கள் ஜீவனுள்ள தேவனிடத்தில் பயபக்தியோடுகூடிய உணர்வோடு உண்மையாக ஒட்டிக்கொண்டுள்ளது. அவர்கள் தேவனைப் பற்றிய தங்களுடைய அறிவில் சத்தியத்திலிருந்து ஒரு கோடி மைல் தொலைவில் இருக்கலாம், ஆனால் அவர்களுடைய இருதயங்கள் தேவன் ஒருவர் உண்டு என உறுதியாயிருக்கிறது.

இருதிறத்தாருடைய மனதில், அடிப்படைகாரணி தேவனோடு இடைபடுகிறது! சில ஜனங்கள் மறுதலிக்கும் அவஸ்தையில் இருந்தபோதிலும் வேறெந்த ஒரு விஷயமும் இப்பேர்பட்ட தகுதியையும் ஒட்டுமொத்த முன் அனுபவத்தையும் உரிமை பராட்ட முடியாது இந்த உண்மை ஒன்றுமட்டுமே இறுதியாக பேசுகிறது. தேவன் இல்லாதிருந்தால், யாருடைய சாயலில் நாம் உருவாக்கப்பட்டுள்ளோம், பெற்றோருக்கு காணாமல் போன ஒரு குழந்தையைப் போல யாரை நோக்கி நம்முடைய ஆவிகள் கதறுகிறது, இந்த பிரபஞ்சம் மற்றும் அவரிடத்திற்கு எட்டாத தொடர் தூரமும் பல வருடங்களாக இருந்துவருகின்ற யுகத்திற்கு மேலாக வளர்ச்சியடைந்திருக்கும்.

இன்னொரு எண்ணம் மனதிற்கு வருகிறது: ஏதோ சாத்தானை நான் ஒருபோதும் கண்டதில்லை, ஆனால் அவன் இருக்கின்றான் என்பது பற்றி சந்தேகமில்லை. ஏன்? முதல் காரணம்: பாவம் மற்றும் தீமையாக எப்பொழுதும் அவனுடைய கிரியைகளை சுற்றிலும் என்னால் காணமுடிகிறது. அதன் விளைவாக அழிவு தன்னுடைய பங்கை நிறைவேற்றுகிறது. இரண்டாவது காரணம்: சாத்தானுடைய தந்திரங்களுக்கு எதிர்ப்பைக்காட்டுவதில், தேவன் நம்முடைய எண்ணங்களின் மூலம் சாத்தான் தொடர்ச்சியாக இருக்கின்றான் என்பதைக் குறித்த சரமாரியான கேள்விகளையும் சந்தேகங்களையும் விவரிக்கிறதில்லை! தேவன், தாமே, சாத்தான், கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல எவனை விழுங்கலாமோ என்று பூமிமுழுவதும் சுற்றித்திரிகிறான் என நம்மிடம் சொல்லுகிறார் (1பேது.5:8). தேவன் சாத்தானின் உண்மையான நிலையை அறிந்து நம்முடைய விசுவாசத்தை ஜாக்கிரதையாய் காத்துக் கொள்கிறார் - ஏனென்றால் அவர் உண்மையுள்ளவர் -

**பெண்கள் பகுதி**

# தேவன் ஒருவர் இருக்கிறாரா?

## Is There A God?

*-Betty*




நான் காலையில் தேவப் பிரசன்னத்தின் உணர்வோடு எழுந்தேன். நான் தூங்கின போது அவர் தொடர்ந்து கவனமாய் பார்த்துக்கொண்டார் மேலும் அவருடைய முழுக்கவனத்தையும் எதிர்பார்த்த என் வாழ்க்கையின் எல்லா பாகங்களிலும் அன்பு செலுத்தி, பராமரித்து வந்தாரென என்னுடைய இருதயத்தின் வார்த்தைகள் அவருக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்தன.

சாத்தான் என் மூளையின் வழியாய் ஒரு எண்ணத்தை விதைக்கிறான். “நீ தேவனைப் பார்த்திருக்கவில்லை. ஒருவேளை அவர் இருந்தால், நாத்திகர் சொல்வது போல, உன் சிந்தையில் உதித்த ஒரு ஆதாரம் மட்டுமே. பிறகென்ன?

முழுமனதில் கபடில்லாதிருக்கவும் திறந்த மனதுடனிருக்கவும், நான் அந்த எண்ணத்தை பரிசோதிக்கிறேன். பிறகென்ன?

என் இருதயத்தில் வெறுமை உள்ளது. தேவனை நோக்கி நான் செலுத்தியிருந்த மனமார்ந்த அன்பு இதில் உலர்ந்துபோகிறது. பாதுகாப்பான என் உணர்வு மறைகிறது. நான் இதற்கு மேல் வாழ்விற்கான நங்கூரத்தையும் உறுதியையும் கொண்டிருக்கவில்லை. நான் மொத்தத்தில் எங்கே சென்று கொண்டிருக்கிறேன் என்பது பற்றிய அறிவு கொஞ்சமுமில்லை.

என்னுடைய சிந்தையில் என்னைக் காட்டிலும் பெரிதானதொன்றுமில்லை, இன்றைய சரீர ஜீவியத்திற்குரிய தேவைகளைக் காட்டிலும் பெரிதான நோக்கமில்லை- ஏனென்றால் நாளை ஒருவேளை வராது, தொடுவானத்தில் நித்திய வாழ்வு இல்லை, - வெறுமை, அதன்பின் பயம் மற்றும் எனது மனதின் ஒவ்வொரு பிளவிலும் பயனற்ற வெள்ளம்.

இதைவிட தேவனில்லாமல், இது மிகக்கேட்டிலும் அதிகம் “ஒன்றும் மிஞ்சவில்லை”. இது, நான் இன்னும் வாழ்கிறேன் மேலும் உலகத்தின் எல்லா சவால்களும் இன்னும் வாழ்கின்றன மேலும் நான் எவ்வித உதவியையும் பெற்றிருக்கவில்லையென மரித்துப் போன நிகழ்வை ஏற்றுக்கொள்வதுடன் இன்னும் இந்த வாழ்வை நான் தைரியமாய் எதிர்த்து நிற்கிறேன். இந்த பீதியான நினைவை மாற்றுவதைக் காட்டிலும் பெரியது வேறொன்றுமில்லை”. உன்னதமானவரிடத்தில் விசுவாசத்தை இழந்தவர்களுக்கு தொடுவானத்தில் தற்கொலை நேரிடக் காத்திருப்பதில்லை என நான் ஆச்சரியப்படுகிறேன்.

ஆனால் ஒரு உறுதியான எண்ணம் தனிமைபயத்தினை துளைத்துவிடுகிறது. “ஆம், நீ வாழ்ந்திடு உன்னைச் சுற்றியுள்ள வாழ்வின் எல்லா அதிசயங்களும் காண்கின்ற உலகத்தின் அதிசயங்களும் வாழ்கின்றன. ஒரு கணவனின் இழப்பு அல்லது பெற்றோருடைய இழப்பு அல்லது ஒரு குழந்தை, நீ



தனித்தனியே 39 "புத்தகங்களை" கொண்டதாக பழைய ஏற்பாடு இருக்கிறது. முதலாவதாக ஒரு சுருக்கமான சரித்திரம்-பிதாக்களின் காலம்- ஆதியாகமம் புத்தகத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் தேவன் தமக்கு உண்மையுள்ளவர்களாயிருந்த குடும்ப பிதாக்களுடனே (முற்பிதாக்கள்) நேராக செயல்படுகிறவராயிருந்தார்.

ஆதி.1:1 சொல்கிறது, "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று இந்த அதிகாரங்கள், மனுஷன் சிருஷ்டிக்கப்பட்ட விதம், பாவத்திற்குள்ளாக அவன் விழுதல், அவனுடைய உடனடியான பின் சந்ததியார் மற்றும் உலக ஜனங்களுக்குள்ளே கீழ்ப்படியாமையின் வளர்ச்சி ஆகியவற்றை இந்த அதிகாரங்கள் சொல்லுகின்றன.

இப்புத்தகத்தின் 6-8 அதிகாரங்களில் நீதிமானாயிருந்த ஒரு மனுஷன் நோவா என்பவனையும், பூமியின் மேல் வரவிருந்த ஜலப்பிரளயத்தையும், அதற்கு அவனும், அவனுடைய குடும்பமும், சகல மிருக ஜீவன்களுடைய பிரதிநிதித்துவங்களும் இரட்சிக்கப்படும்படியாக, ஒரு பேழையை கட்டும்படியாக தேவன் அவனுக்கு சொன்ன போதனைகளையும் வாசிக்கிறோம். இன்றைக்கு அவிசுவாசிகள் உலகளாவிய ஜலப்பிரளயத்தை பற்றி குறிப்பு ஒரு கட்டுக்கதையே தவிர வேறொன்றும் இல்லை என்று கூறுவார்கள். இதற்கு நேரிடையான சவாலாக பழங்கால நாகரீகங்களை பற்றி குறிப்புகளில் 200-க்கும்மேற்பட்ட ஜலப்பிரளயத்தை குறித்த குறிப்புகள் உலகம் முழுவதிலும் சிதறி காணப்படுகின்றன. இந்த குறிப்புகளை எழுதியவர்கள், ஒருவர் மற்றவருடைய வரலாறுகளை அடைய வழியில்லாமல் இருந்த போதிலும், அநேகம் வேதாகம குறிப்புகளில் குறிப்பிட்ட விளக்கங்கள் ஒத்துப் போகக்கூடியவைகளாயிருக்கின்றன. ஆதியாகமம் 11-ம் அதிகாரத்திலுள்ள பெரிதான "தேசங்களின் பட்டியல்" உலக மக்களின் சரித்திரங்களால் உறுதிப்படுத்தப்பட்டதாயிருக்கிறது.

### மோசேயின் யுகம்

ஆதியாகமம் 12-ம் அதிகாரத்தில் தேவன் கல்தேயருடைய பட்டணமாகிய ஊர் என்னும் பட்டணத்தைச் சேர்ந்த ஆபிரகாம் என்ற ஒரு மனுஷனோடு தேவன் செய்த உடன்படிக்கையை நாம் வாசிக்கிறோம். பூமியிலுள்ள சகல தேசங்களும் அவனுடைய சந்ததிகள் வழியாக ஆசீர்வதிக்கப்படும் என்று வாக்குப்பண்ணப்பட்டது (ஆதி.12:3). இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்ட அவருடைய ஜனங்கள் வந்தார்கள், அதின் மூலமாக இயேசுகிறிஸ்து பிறந்தார்.

யாத்திராகமம் தொடங்கி பழைய ஏற்பாட்டில் கடைசி புத்தகமாகிய மல்கியா வரை தேவன் ஆபிரகாமின் சந்ததியாருடனே கொண்டிருந்த செயல்பாடுகளை சொல்வது மாத்திரமல்ல, வரப்போகிற வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இரட்சகர் தேவகுமாரன் இயேசுகிறிஸ்துவின் தன்மை குறித்த அநேக தீர்க்க தரிசனங்களை நாம் காண்கிறோம்.

வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டு பகுதி முக்கியமானதாக இருக்கிறது, ஏனென்றால் இது நமக்கு மிக சரியாக தேவன் மனுமக்களோடு 4000 ஆண்டுகளாக கொண்டிருந்த செயல்பாடுகளை வரலாற்று குறிப்பாக நமக்கு அளிக்கிறது; தேவனுடைய தன்மையையும், அவர் தம்முடைய ஜனங்களுக்காக கொண்டிருந்த வாஞ்சைகளையும் நாம் அதிகமாக உணர்ந்து கொள்ள இது உதவியாக இருக்கிறது; மேலும் இந்த தீர்க்கதரிசின வாக்கியங்கள் நிறைவேறுவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் அவைகளின் நிறைவேற்றத்தையும் நமக்கு அளிக்கிறது. இந்த உண்மைகள் கவனத்துடனே கற்கப்பட்டு வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது, நாம் இவ்வுலகத்தில் வாழ்வதற்கும், வரவிருக்கிற உலகத்தில் அழியாமையின் வாக்குத்தத்தத்தையும் அளிக்கிறபடியால் நம்முடைய வழிகாட்டியாயிருக்கிறது என்பதையும் நாம் நம்பமுடியும்.

**கிறிஸ்தவ யுகம்**

வேதவாக்கியங்களுக்கு புதிதாய் இருக்கிறவர்களுக்காக ஆதியாகமத்தின் முதல் 12 அதிகாரங்களை வாசிக்கத் தொடங்குகிறவர்களுக்கு ஒரு அடிப்படையான உணர்ந்து கொள்ளுதல் உண்டாகும்படி ஒரு சூத்திரமாக (ஃபார்முலா) அது இருக்கும், பின்னர் அவர்கள் புதிய ஏற்பாட்டை வாசிக்கத் தொடங்கலாம். இந்த பெயரிலிருந்தே இந்த உடன்படிக்கைதான் இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறது என்ற முடிவை நாம் எடுக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் யோவான்: கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை குறித்த நான்கு குறிப்புகள்) பழைய ஏற்பாட்டிலுள்ள இயேசுகிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கை, உபதேசங்கள், மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலை குறித்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல்களை நமக்கு அளிக்கின்றன. 2000 ஆண்டுகளுக்கு முன்பாக ஏழை பெற்றோருக்கு அவர்கள் வசித்து வந்த சிறிய தேசத்திலே பிறந்த மனுஷனாகிய இவர் மிகவும் மோசமான சிலுவை மரணத்தை அடைந்தார். அவருடைய மரணத்துக்கு பின்னே, அதை போன்றதொரு மரணத்தை யாரும் கேள்விப்பட்டிருக்க முடியாது. ஆனால் இன்றோ அவர் உலகத்தையே மேற்கொண்டவராக இருந்து வருகிறார். நாட்காட்டிகளே அவருடைய பிறந்த தேதியில் இருந்து கணக்கிடப்பட்டு வருகின்றன.

விளக்குவதற்கு அரிதான இந்த நபர்: இருந்தவராகவும் இருக்கிறவராகவும் இருக்கிறார். தீர்க்கதரிசனங்கள் அவரைக்குறித்து, "நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் (சங்.2:7; எபி.1:5) என்றும் உரைத்திருந்தன. தேவத்துவத்தில் ஒருவராயிருந்த அவர் "எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது" (எபி.2;17). எனவே மாம்சத்திலே வந்து மனுக்குலத்தை அதன் சிருஷ்டிகரராகிய தேவனிடமிருந்து பிரித்திருந்த பாவங்களுக்காக, பூரணராக்கப்பட்ட பலியாக மரித்தார் (எபி.2:17).

கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை குறித்து வாசிப்பதை தொடர்ந்து நீங்கள்,அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் அவருடைய ஆவிக்குரிய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையை குறித்து நீங்கள் வாசிப்பீர்கள். அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகி தங்களுடைய பாவ வாழ்க்கையை விட்டு திரும்பி அவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார் என்ற நம்பிக்கையை அறிக்கையிட்டு கல்லறையில் செய்யப்பட்ட அவருடைய அடக்கத்துக்கு ஒப்பாக தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்பட்டு ஒரு புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளும்படி உயிரோடெழுப்பப் பட்டவர்களாயிருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டின் மீதியான பகுதி சபையின் வளர்ச்சியை குறித்த போதனைகள் மற்றும் கிறிஸ்துவுடனே கூட நடக்கிறவர்களாகிய முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களை குறித்த போதனைகளை கொண்டதாக இருக்கிறது.

வேதாகமத்தின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷம்

வெளிப்படுத்தின விசேஷத்தின் பெரும்பாலான பகுதி தீர்க்கதரிசனமாக இருக்கிறது. 20-22 அதிகாரங்களில் உள்ள வாக்குத்தத்தம் என்னவென்றால் புதிய வானம், புதியபூமியிலே தேவனோடே கூட வாழும் வகையில் விசுவாசிகளை எடுத்துக் கொள்ளும்படியாக கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதாகும்.

-தமிழில் மொழிபெயர்த்தவர் **சகோ. ரவி ஆசீர்.**

தூத்துக்குடி (Bro.Ravi Asir, Tuticorin).





## சத்திய வார்த்தையில் சரித்திரம்

-John S. Nathan

***மூன்றாம் அலெக்சாண்டர் மாவீரன்***

(Defender of men)

*தோற்றம்: 20.9.356 B.C - மறைவு: 30.2.323 B.C.*

*தந்தை: 2ஆம்பிலிப்பு . மக்கெதொனியாவின் மன்னன்.*

- *எகிப்தை வென்ற உடனே அலெக்சாண்ரியா நகரை நிறுவினான்.*
- *உலகிலேயே முதன் முதலில் நாணயத்தில் தன் உருவத்தை பதித்த பெருமையுடையவன்.*
- *கை, கால் வலிப்பு நோய் (Epileptic) உள்ளவன்.*
- *வலது கண் நீல நிறமும், இடது கண் கறுப்பு நிறமும் உள்ளவன்.*
- *இடது கை பழக்கமுள்ளவன், குள்ளமானவன்.*
- *தனது 20-வது வயதில் மாசிடோனியாவின் மன்னனாக முடி சூட்டப்பட்டான்.*
- *13 வருட ஆட்சிகாலத்தில், கிரீஸ் முதல் எகிப்துவரைக்கும் மற்றும் இந்தியாவின் வடமேற்கு பகுதிவரை 3 கண்டங்களை ஆட்சி செய்தான்.*
- *முப்பெரும் கண்டங்களை வெல்ல, ஐம்பெரும் படையை மேற்கொண்ட மகா அலெக்சாண்டரால் 22 நாட்களே வாழக்கூடிய கொசுவை வெல்ல முடியாமல் 11 நாள் காய்சலுக்குப் (மலேரியா) பிறகு பாபிலோனில் 30.2.323-ல் மரணம் அடைந்தான் (அப்போது பெப்ரவரிக்கு 30 நாட்கள் இருந்தது).*
- *சிறுவனாக இருந்தபோது ப்யுனி பேலஸ் என்ற முரட்டு அரேபிய குதிரையை அடக்கி சவாரிசெய்தவன்.*
- *தனது ஆசானும், வழிகாட்டியுமான அரிஸ்டாட்டில் (Aristotle 427-347 B.C) அறிவுரையான, உலகை வென்றிட கிரேக்க கலாச்சாரத்தைப் பரப்பு என்ற கொள்கையை கடைபிடித்தவன். இறுதியாக தான் வென்ற இந்தியாவை மன்னன் புருஷோத்துமன் திரும்ப ஆண்டிட வழிவகுத்தவன்.*
- *அவன் மரணத்திற்கு பிறகு மனைவிகளும், மகன்களும், சகோதரர்களும் இருந்தும், அவர்களின் சொந்த மக்களால் கொலை செய்யப்படுவதற்கு முன்னமே அவன் 3 தளபதிகளுக்கு, தன் நாட்டை ஆள நியமித்தான்.*
  *1. TOLEMY எகிப்தையும், 2. SELEUCUS கிழக்கு கிரீஸ் நகரையும்*
  *3. CASSENER மசிடோனியாவையும்*

***தானியேல் 11:2-4*** *(கி.மு. 539 -ல் எழுதப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி 300 ஆண்டுகளுக்குப் பிறகு கிரேக்கராஜ்யம் தனது பலத்தை சிறிது, சிறிதாக இழந்து கடைசியில் தன் வம்சத்தினர் யாருமே ஆட்சிசெலுத்தாமல் அழிந்தது). இவ்வாறாக சத்தியவார்த்தை நிறைவேறினது.*